*செய்தி வெளியீடு*

செ.வெ.எண்:18 நாள்:08.11.2017

நீலகிரி மாவட்டம் குந்தா வட்டம் கீழ்குந்தா கிராமத்தில் இன்று (08.11.2017) மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.ஜெ.இன்னசென்ட் திவ்யா, இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்ற மனுநீதிநாள் மக்கள் தொடர்பு முகாமில் 90 பயனாளிகளுக்கு ரூ.32,42,500/- மதிப்பிலான பல்வேறு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

நீலகிரி மாவட்டம் குந்தா வட்டம், கீழ்குந்தா கிராமத்தில் இன்று (08.11.2017) மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.ஜெ.இன்னசென்ட் திவ்யா, இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்ற மனுநீதிநாள் மக்கள் தொடர்பு முகாமில் 90 பயனாளிகளுக்கு ரூ.32,42,500/-மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை வழங்கி பேசியதாவது,

ஒவ்வொரு திங்கட்கிழமையும் மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் மாவட்ட ஆட்சியரக கூட்டரங்கில் நடைபெற்று வருகிறது. குந்தா பகுதியில் இருந்து மிக சிறிய அளவே மனுக்கள் பெறப்படுகிறது. அதற்கு என்ன காரணம் என்று தெரியவில்லை. அதனால் தான் உங்களை தேடி இங்கு வந்திருக்கிறோம். மனுநீதி நாள் முகாமில் அரசு சார்ந்த எல்லா துறை அதிகாரிகளும் உங்களை தேடி வந்துள்ளனர். எனவே மக்கள் அனைவரும் அதை பயன்படுத்தி கொள்ள வேண்டும். மேலும் இப்போது கந்துவட்டி என்பது ஒரு பெரிய பிரச்சனையாக உள்ளது. வெளியில் போய் கடன் வாங்கி துன்பப்படாமல் கூட்டுறவு வங்கி மூலம் கடன் பெறலாம். அரசு நமக்காக எத்தனையோ திட்டங்களை தீட்டி அதை செம்மையாக செயல்படுத்தி வருகிறது. தமிழக அரசு டெங்கு தடுப்பு பல்வேறு நடவடிக்கை மேற்கொண்டு வருகிறது. அதற்கு பொதுமக்கள் தான் ஒத்துழைப்பு அளித்து ஒவ்வொருவரும் தங்களது வீட்டையும் சுற்றுப்புறத்தையும் சுத்தமாக வைத்து கொண்டால் தான்எந்த நோயும் வராமல் தடுக்க முடியும்.

மேலும் கீழ் குந்தா பேரூராட்சி மொத்தம் 8886 மக்கள் தொகை கொண்ட பேரூராட்சியாக உள்ளது. இங்கு 4143 குடியிருப்புகள் உள்ளது. இப்பேரூராட்சியில் இதுவரை 419 தனிநபர் கழிப்பறைகள் கட்டப்பட்டுள்ளது. மேலும் 559 தனிநபர் கழிப்பிடம் கட்டப்படவுள்ளது. தூய்மை பாரத இயக்கம் திட்டத்தின் கீழ் இப்பேரூராட்சியில் கூடுதலாக சமுதாய கழிப்பிடம் மற்றும் தனிநபர் கழிப்பிடங்கள் கட்டப்பட்டு வருகிறது.

2011-2012 முதல் நடப்பாண்டு முடிய ரூ.381.50 இலட்சம் மதிப்பீட்டில் தார் சாலை பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. நீலகிரி மாவட்டமானது உலகிலேயே மிக சிறந்த சுற்றுலா தலமாகவும், பசுமை நிறைந்த மாவட்டமாகவும் உள்ளது. இம்மாவட்டத்திலுள்ள பொது மக்களும் அனைத்து வகையிலும் ஒத்துழைப்பு வழங்கும் மக்களாக இருக்கிறார்கள். எனவே இம்மாவட்டத்தை மேலும் பசுமையாகவும், சுத்தமாகவும் வைக்க அனைத்து பொதுமக்கள் ஒத்துழைப்பு வழங்க வேண்டும்.

கீழ்குந்தா பேரூராட்சி சுகாதாரத்தில் மாவட்டத்திலேயே சிறந்த மற்றும் முன்னுதாரனமான பேரூராட்சியாக உருவாக்குவதற்கு அனைத்து பொது மக்களும் ஒத்துழைப்பு வழங்கி குப்பைகளை தெருக்களிலும் வடிகால்களிலும் போடாமல், கிராமத்தில் அமைக்கப்பட்டுள்ள குப்பை குழியில் மக்கும் குப்பைகளை கொட்டி மக்காத குப்பைகளை ஊராட்சி மூலம் பணியமர்த்தப்பட்டுள்ள தூய்மை காவலர்களிடம் வழங்கி ஒத்துழைப்பு வழங்குமாறு தெரிவித்தார்.

இம் மக்கள் தொடர்பு மனுநீதி நாள் முகாமில் முதியோர், முதிர்கன்னி, விதவை, ஊனமுற்றோர் உதவி தொகையாக ஒரு பயனாளிக்கு ரூ.1,000/- வீதம் 33 பயனாளிகளுக்கு ரூ.33,000/-, 15 பயனாளிகளுக்கு குடும்ப அட்டைகளும், மாவட்ட முன்னோடி வங்கி மூலம் 9 பயனாளிகளுக்கு ரூ.9,01,000/- மதிப்பில் வங்கி கடனுதவியும், 11 பயனாளிகளுக்கு வாரிசு சான்றிதழ்களும், 20 பயனாளிகளுக்கு ரூ.23,00,200/-மதிப்பில் நத்தம் பட்டாவும், மழையினால் பாதிக்கப்பட்ட 2 பயனாளிகளுக்கு ரூ.8,200/- மதிப்பில் நிதியுதவியும் ஆக மொத்தம் 90 பயனாளிகளுக்கு ரூ.32,42,400/-இலட்சம் மதிப்பில் நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டுள்ளது. இம்மனுநீதி நாள் மக்கள் தொடர்பு முகாமில் பொதுமக்களிடமிருந்து 156 மனுக்கள் பெறப்பட்டது. மேலும் டெங்கு தடுப்பு உறுதி மொழியினை மாவட்ட ஆட்சியர் அவர்கள் தலைமையில் அரசு அலுவலர்கள் மற்றும் பொது மக்கள் ஏற்றுக் கொண்டனர்.

பின்னர் மஞ்சூர் அரசு மகளிர் உயர் நிலைப்பள்ளி சத்துணவு கூடத்தினை மாவட்ட ஆட்சியர் அவர்கள் ஆய்வு செய்து மாணவிகளுடன் மதிய உணவு சாப்பிட்டார். அதனை தொடர்ந்து ஒணிகண்டி, பெள்ளட்டிகம்பை பகுதிகளில் டெங்கு தடுப்பு நடவடிக்கைகள் மற்றும் சுகாதாரப்பணிகள் குறித்து ஆய்வு செய்தார். மேலும் மின்அருங்காட்சியத்தை பார்வையிட்டார்.

இந்நிகழ்ச்சியில் உதகை கோட்டாட்சியர் (பொ), திரு.முருகன், குந்தா வட்டாட்சியர் திருமதி.சாந்தினி, அரசுத்துறை அலுவலர்கள் மற்றும் பொது மக்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.